செ.வெ.எண்: 25 நாள்: 16.12.2016

# பத்திரிகைச்செய்தி

## பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை - புதுக்கோட்டை மாவட்டம்.

புதுக்கோட்டை மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாகவுள்ள ஒரு நிரந்தர முழு நேர காவலர் பணியிடத்திற்கு விருப்பமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட பணியிடமானது பொதுப்போட்டி முன்னுரிமை (General Priority) பெற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னுரிமை பிரிவினர் : 1) ஆதரவற்ற விதவைகள் 2) கலப்பு திருமணம் 3) முன்னாள் இராணுவத்தினர் 4) முன்னாள் இராணுவத்தினரை சார்ந்தோர் 5) மாற்றுத்திறனாளிகள்.

பதவிக்கான தகுதி விவரம்: கல்வித்தகுதி: தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு: 01.12.2016 அன்றைய நிலையில் முற்பட்ட வகுப்பினர் (General) 30 வயது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) 35 வயது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (BC/MBC) 32 வயது (மாற்றுத்திறனாளிகள் எனில், அனைத்து வகுப்பினருக்கும் கூடுதலாக 10 வருடங்கள்) - மேற்கண்ட வயது வரம்பிற்குள் இருத்தல் வேண்டும். ஊதிய விகிதம் ரூ.4800-10000 + தர ஊதியம் ரூ.1300.

முன்னுரிமை சான்றிதழ், சாதிச்சான்றிதழ் மற்றும் வயது சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களை கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட வயது வரம்பிற்கு மேல் உள்ள விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி:31.12.2016. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: புள்ளிஇயல் துணை இயக்குநர், மாவட்ட புள்ளிஇயல் அலுவலகம், மணிப்பள்ளம் சாலை, (கணேஷ்நகர் காவல் நிலையம் அருகில்), போஸ் நகர், புதுக்கோட்டை - 622001.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**